தி.மு.கழகத்தின் இதயத் துடிப்பு தான் 'முரசொலி'!

முரசொலி மாறன் கடிதம்!

அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்கள் 1980 - ஆம் ஆண்டு 'முரசொலி' ஏடு தனது வெள்ளி விழா ஆண்டில் மதுரைப் பதிப்பினை தொடங்கியபோது 'மதுரையில் ஒலிக்குது முரசொலி' என்று தலைப்பிட்டு , அதற்கு வாழ்த்துத் தெரிவித்து தன் கைப்பட எழுதிய கடிதம் .

அதனை இங்கே வெளியிட்டுள்ளோம். அது வருமாறு:-



மதுரையில் ஒலிக்குது முரசொலி!

" திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாளும் கேடயமும் "- என்று பேரறிஞர் அண்ணாவால் போற்றிப் புகழ்ந்துரைக்கப்பட்ட 'முரசொலி' ஏடு தனது வெள்ளிவிழா ஆண்டில் மதுரைப் பதிப்பினைத் துவங்கி நடத்துவது அதன் சீர்மிக்க வளர்ச்சியையும், இது [illegible] தமிழர் தொண்டிலும் மேலும் ஒரு புதிய கட்டமாகும்.

1942-ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் திருவாரூரில் துண்டுப் பிரசுரமாக 'முரசொலி' துவக்கப்பட்டது. பின்னர் 1946-ஆம் ஆண்டில் 'முரசொலி' வார வெளியீடாக உருப் பெற்றது.

இதன்பிறகு பல ஆண்டுகள் 'முரசொலி' ஒலிக்கமுடியாத நிலை உருவாகி; பிறகு 1954-ஆம் ஆண்டிலே சென்னையிலிருந்து மீண்டும் வார ஏடாக முழக்கமிடத் ~~தொ~~ தொடங்கியது.

1960-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா பிறந்த நாள் (செப்டம்பர்-15) முதல் 'முரசொலி' ~~யின்~~ தினசரி ஏடானது.

ஆம்; 'முரசொலி' சென்னையிலிருந்து துவக்கப்பட்ட 1954-ஆம் ஆண்டிலிருந்து கணக்கிட்டால் இந்த ஆண்டு 25-ஆவது ஆண்டை முடித்துக்கொண்டு 26-ஆவது வெள்ளிவிழா ஆண்டில் காலடி எடுத்துவைத்துத் தனது இலட்சியப் பயணத்தில் பீடுநடை போட்டுவருகிறது.

திரும்பிப் பார்க்கிறேன் — திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதயத் துடிப்புதான் 'முரசொலி'யாக ஒலித்துக்கொண்டிருக்கிறது! ஆமாம்; நாட்டில் கழகத்தின் இலட்சியத்தைப் பறைசாற்றுவதுதான் அதன் இலட்சியமும்!



திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டப் பிரகடனம் செய்துவிட்டால் அதன் இலட்சிய [illegible] வென்றிடும்வரை நாடு நகரம் முழக்கஞ் செய்வதுதான் 'முரசொலி'யின் வேலைத்திட்டம் - என்பதை அதன் எதிரிகளும் ஒப்புக் கொள்வர்.

'முரசொலி' பாதுகாப்புச் சட்டத்தைச் சந்தித்திருக்கிறது. அதன் கேலிச் சித்திரங்கள் உலகெங்கிலும் உள்ள ஏடுகளில் பிரசுரமாகியிருக்கின்றன.

முழுமையான தணிக்கைக்கு உட்பட்ட காலமும் உண்டு. அப்போதெல்லாம் அதில் வெளிவரும் [illegible] புரிந்துகொள்ள முடியாமல் அதிகாரிகள் விழித்ததும் உண்டு!

— இவ்வாறு, தி.மு.கழகத்தின் படைக்கலனாய் விளங்கும் 'முரசொலி' 25-வயதைத் தாண்டி வெள்ளிவிழா காண்பது [illegible] கழகத் தோழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் [illegible]!

இதைப்போலவே 'முரசொலி' மதுரையிலிருந்தும் இன்று முதல் வெளிவருகிறது - என்பது பாண்டிய மண்டலத்துக் கழகத் தோழர்களுக்கு மேலும் மகிழ்ச்சியை அளிக்கும் என்று கருதுகிறேன்.



சொந்தத்தில் அச்சகமின்றி — பொதுவாக, மிகவும் வசதிக் குறைவான சூழ்நிலையில் - மதுரைப் பதிப்பு உருவாகியிருக்கிறது.

கழகக் கண்மணிகள் தொடர்ந்து ஆதரவு நல்கினால் மதுரைப் பதிப்பு நன்கு வேரூன்றி வளர்ந்திட வாய்ப்பு உண்டு - என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை.

'முரசொலி' மதுரைப் பதிப்பின் வளர்ச்சி செழுமை நிலை கழகத் தோழர்களின் கையில் இன்று அது ஒப்படைக்கப்படுகிறது. அவர்களது இன்பம், துன்பம் என்றும் இணைந்தே - என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நான் [illegible]... இதுவும் ஒரு [illegible] ஏடு நான் [illegible] தாங்குவது என்பது மிகையான கற்பனையல்ல.

— இந்த அரிய [illegible] கொண்டும் என்ன குறை இருந்தாலும் 'முரசொலி'யைத் தினமும் தவறாமல் வாங்கிப் படிக்கும் கழகக் கண்மணிகளுக்கு! [illegible] இவர்களுக்கெல்லாம் எங்கள் இதய நன்றியை உரித்தாக்கிறேன்.

எங்கள் இன்னல்களில் பங்கேற்கும் [illegible] குடும்பங்களுக்கும், தொழிலாளத் தோழர்களுக்கும், நிர்வாகக் குழுவினருக்கும், விற்பனையாளர்களுக்கும் எங்கள் இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முரசொலி மாறன் அவர்கள் தன் கைப்பட எழுதியுள்ளார்.

– இந்தக் கடிதத்தைப் பாதுகாத்து அனுப்பிய பத்திரிகையாளர் தி.கூடலரசன் அவர்களுக்கு நன்றி. (ஆ.ர்)

நீட் தேர்வுக்கு எதிராக

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் உண்ணாவிரதம்!

மஞ்சகுப்பம் தலைமை அஞ்சல் நிலைய அலுவலகம் முன்பு நடைபெறுகின்றது!

கடலூர், ஆக. 18-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக உண்ணாவிரத அறப்போர் மஞ்சகுப்பத்தில் நடைபெறுகிறது.

இது பற்றி விவரம் வருமாறு:

நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், வரும் 20.08.2023, ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை வரை கடலூர் மஞ்சகுப்பம் தலைமை அஞ்சல் எதிரில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெறும்.

அது சமயம் இந்த உண்ணாவிரத்தில் இளைஞர்கள், மாணவர்கள், மருத்துவர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகதோழர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கடலூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான

ரூ.5,077 கோடி மதிப்பீட்டிலான 5557.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன!

சென்னை, ஆக. 18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களைஜ் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று (17.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.10 கோடி மதிப்பீட்டிலான நிலம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக நாகப்பட்டினம் வேளாங்கண்ணி கிழக்கு கடற்கரை சாலையில் பாப்பாகோயில் கிராமத்தில் அமைந்துள்ள 1.39 ஏக்கர் நிலத்தில் இரண்டு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருந்து வந்தனர். இந்நிலையில் நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வி.குமரேசன் அவர்கள் தலைமையில் உதவி ஆணையர் திருமதி ப.ராணி முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.10 கோடியாகும். இந்நிகழ்வின்போது தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருமதி பி.எம். அமுதா, திருக்கோயில் செயல் அலுவலர் இரா. தினேஷ் சுந்தரராஜன் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

புதிய அரசு பொறுப்பேற்ற 07.05.2021 முதல் இன்று வரை திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.5,077 கோடி மதிப்பீட்டிலான 5557.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.